**செ.வெ. எண்: 171** **நாள்:03.03.2012**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.3.2012) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 2 கோடியே 29 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட 34 புதிய வாகனங்களை வழங்கினார்கள்.

அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், சாதனைகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் அரசின் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியை செய்தி மக்கள் தொடர்புத்துறை செவ்வனே ஆற்றி வருகிறது. இப்பணிகளை செம்மையாகவும், சிறப்பாகவும். துரிதமாகவும் செயல்படுத்தும் வகையிலும், விளம்பரப் பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு 34 புதிய வாகனங்கள் வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த ஆணைக்கேற்ப, 2 கோடியே 29 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 16 பொலிரோ ஈப்புகள், 17 டெம்போ டிராவலர் வீடியோ வேன் மற்றும் 1 டோயோட்டா இன்னோவா வாகனம் ஆகியவை வாங்கப்பட்டுள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசின் விளம்பரப் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்காக தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்காக வாங்கப்பட்டுள்ள 34 புதிய வாகனங்களுக்கான சாவிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், வாகன ஓட்டுநர்களிடம் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 3.3.2012